# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.
**MCOP No. 478/2023 MCOP No. 477/2023**
**& MCOP No. 476/2023**

சாட்சி -PW1

பெயர் -மதுமதி (எ)வருகுமதுமத

கணவர் பெயர் - வரகு தயாசாகர் ரெட்டி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30**.06.2026.**

(சாட்சிக்கு தெலுங்கு மட்டுமே எழுதப்படிக்க தெரியும் என்பதால் 2 ஆம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் தெலுங்கில் சாட்சியிடம் கேட்டு சாட்சி தெலுங்கில் சொன்னதை திருமதி. சண்மூகபிரியா வழக்கறிஞர், சாட்சிக்கு சாட்சி தெலுங்கில் சொல்வதை சரியாக மொழிபெயர்த்து தமிழில் சொன்னார்)

**குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் என்னுடைய கையெழுத்தை தவிர வேறு எந்த சங்கதியும் தெரியாது என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை சான்றொப்பம் செய்த திருமதி.சண்முகப்பிரியா வழக்கறிஞர் எனக்கு தெலுங்கில் மொழிபெயர்த்து சொன்னார். நான் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை மற்றும் சரியானவை தான். நான், எனது கணவர், எனது மகன் மற்றும் மருமகள் எங்கள் ஊரான காளகஸ்த்தில் இருந்து கார் மூலமாக திருவண்ணமலைக்கு வந்து கிரிவலம் முடித்து கொண்டு மீண்டும் திருவண்ணமலையில் இருந்து காளகஸ்த்திக்கு செல்லும் போது விபத்து ஏற்பட்டது என்றால் சரி.

விபத்திற்குள்ளான Swift Car எனது பெயரில் உள்ளது. அன்று விபத்துக்குள்ளான Swift Car-யை எனது மகன் சூர்யாதேஜா ரெட்டி ஒட்டினார். நாங்கள் காரில் வரும் போது

மினி வேன் டிரைவர் அதிவேகமாக வந்து எங்கள் Swift Car மீது மோதியது. இந்த விபத்து நேருக்கு நேர் நாங்கள் இடது புறமாக செல்லும் போது வலதுபுறத்தில் இருந்து வந்து மினிவேன் மோதியது. இந்த விபத்தின் போது எனது மகன் காரை ஒட்ட எனது மருமகள் எனது மகனுக்கு பக்கத்தில் உட்கார்ந்து இருந்தார். நானும், எனது கணவரும் பின்புறம் உட்கார்ந்து இருந்தோம்.டிரைவருக்கு இருக்கைக்கு பின்னால் எனது கணவரும், எனது மருமகள் இருக்கைக்கு பின்னால் நானும் உட்கார்ந்து இருந்தோம். இந்த விபத்தின் போது எனது மகன், மருமகள், எனது கணவர் மூவரும் இறந்து விட்டார்கள்.

எனக்கு தலையில் வெட்டு காயம் ஏற்பட்டது. பார்லபள்ளி கோவர்த்தன ரெட்டி காளகஸ்த்தியில் இருந்து வந்து ஆஸ்பத்திரியில் இருந்த என்னை விபத்து பற்றி விசாரித்து விட்டு புகார் அளித்தார். கோவர்த்தன ரெட்டி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் புகார் ம.சா.ஆ.1 பதியப்பட்டுள்ளது என்றால் சரி. கோவர்த்தன ரெட்டிக்கு விபத்து குறித்து நேரடியாக தெரியாது. ஆனால் நான் சொன்னேன். எங்கள் கார் மீது மோதிய வேன் எண் 3688 என்பது மட்டும் தான் தெரியும்.

முதல் தகவல் அறிக்கையில் வேன் ஒட்டுனர் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி. குற்ற பத்திரிக்கை என் மகன் மீது சூர்யாதேஜா ரெட்டி மீது தாக்கல் செய்து வழக்கு உண்மைக்கு புறம்பான வழக்கு என இறுதி அறிக்கையை முடித்து விட்டார்கள் என்றால் சரி. இந்த விபத்திற்கு முழு காரணம் எனது மகன் சூர்யாதேஜா ரெட்டி கவனகுறைவாக தான் ஒட்டியது தான் காரணம் என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கும் நான் பற்களுக்கு எடுத்துக் கொண்ட சிகிச்சைக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 டிஸ்சார்ஜ் சம்மரிக்க பற்கள் சம்மந்தமாக செலவு செய்த தொகைக்கு அது என்னுடைய தனிப்பட்ட செலவினங்கள் என்றும் விபத்தினால் ஏற்பட்ட சிகிச்சை கிடையாது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.12 விபத்து நடந்து ஒரு வருடம் கழித்து சிகிச்சை எடுத்துக் கொண்டதால் விபத்திற்கு தொடர்புடைய ஆவணம் கிடையாது என்பதால் ம.சா.ஆ.12 ஏற்ககூடிய ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல.

ம.சா.ஆ.13 சூர்யாதேஜா எண்டர்பிரைசஸ் என்ன விதமான வியாபாரம் மேற்கொள்கிறது என்றால் சிமெண்ட் ஆலே பிரிக்ஸ் தயார் செய்யும் நிறுவனம் ஆகும். ம.சா.ஆ.13 சூர்யாதேஜா எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கு பேன் கார்டு, ஜி.எஸ்.டி, வருமான வரி கணக்கு உண்டா என்றால் உள்ளது. ஆனால் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.13 சூர்யாதேஜா எண்டர்பிரைசஸ் 2007ல் துவங்கினோம். சூர்யாதேஜா எண்டர்பிரைசஸ் Properitor நான் தான். ம.சா.ஆ.13

சூர்யாதேஜா எண்டர்பிரைசஸ் 2017ல் தான் துவங்கப்பட்டுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரி. 2007ல் துவங்கப்பட்டது தவறு என்றால் சரி. ம.சா.ஆ.18, 19, 20 வருமான வரி கணக்கில் வருமான வரி எதுவும் செலுதப்பட்டவில்லை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி.

2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

The Witness deposed on solemn affirmation and typed to my dictation in open court and read over the same to the witness and admitted by the witness to be correct, on this day the June 30th 2026.

P V SANDILYAN
Digitally signed by P V SANDILYAN
Date: 2026.06.30 17:00:26 +0600

Additional District Judge(FTC),
Vellore.